ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் பல்வேறு நிலைகளில் செயல் படுத்தப்படுகிறது.

1. குழந்தைகளுக்கு எதிரான உரிமை மீறல்களை தடுத்தல்.
2. கொடுமைக்கு உட்படும் சூழ்நிலை யிலிருந்து குழந்தைகளை மீட்டெடுத்தல்.
3. வன்முறைக்கு இரையாகும் குழந்தைகளின் மறுவாழ்வை உறுதி செய்தல்.

## குழந்தைகள் பாதுகாப்பு குழு

மத்திய, மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு மக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- மாநில குழந்தைகள் பாதுகாப்பு குழு
- மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழு
- ஒன்றிய அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு
- கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு

ஒன்றிய மற்றும் கிராம அளவிலான கண்காண்ப்பு குழு அமைக்கப்பட்டு செயல்படுகின்றன. மேலும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக்கள் இல்லம்

## தொடர்புக்கு : மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்

| எண். | மாவட்டம் | தொலைபேசி எண். |
|---|---|---|
| 1. | அரியலூர் | 04329 224210 |
| 2. | சென்னை | 044 25952450 |
| 3. | கோயம்புத்தூர் | 0422 2300305 |
| 4. | கடலூர் | 04142 221080 |
| 5. | தர்மபுரி | 04342 232234 |
| 6. | திண்டுக்கல் | 0451 2460725 |
| 7. | ஈரோடு | 04242 225010 |
| 8. | காஞ்சிபுரம் | 044 27234950 |
| 9. | கன்னியாகுமரி | 04652 278980 |
| 10. | கரூர் | Nil |
| 11.. | கிருஷ்ணகிரி | 04343 238200 |
| 12. | மதுரை | 0452 2642300 |
| 13. | நாகப்பட்டினம் | 04365 253018 |
| 14. | நாமக்கல் | 04286 233103 |
| 15. | நீலகிரி | 0423 2445529 |
| 16. | பெரம்பலூர் | 04328 275020 |
| 17. | புதுக்கோட்டை | 04322 221266 |
| 18. | ராமநாதபுரம் | 04567 231098 |
| 19. | சேலம் | 0427 2415966 |
| 20. | சிவகங்கை | 04575 240166 |
| 21. | தஞ்சாவூர் | 04362 237014 |
| 22. | தேனி | 8903184098 |
| 23. | திருநெல்வேலி | 0462 2551953 |
| 24. | திருப்பூர் | 0421 2971198 |
| 25. | திருவள்ளூர் | 044 27665595 |
| 26. | திருவண்ணாமலை | 04175 223030 |
| 27. | திருவாரூர் | 04366 226299 |
| 28. | தூத்துக்குடி | 0461 2331188 |
| 29. | திருச்சி | 0431 2421055 |
| 30. | வேலூர் | 0416 2222310 |
| 31. | விழுப்புரம் | 04146 258099 |
| 32. | விருதுநகர் | 04562 252826 |

மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம்
சமூக பாதுகாப்பு துறை
எண்.300, புரசைவாக்கம் கெல்லிஸ்,
சென்னை - 10, தமிழ்நாடு.
தொலைபேசி எண் : 044 - 2642 6421, 26421354
மின்அஞ்சல் : dsd@tn.nic.in, scpstn4@gmail.com
இணையதளம் : tnsocialdefence.com



# ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம்




**CHILD LINE : 1098**

## அறிமுகம் :

இந்திய அரசின், ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் குாந்தை பாதுகாப்பு திட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசின் சமூக பாதுகாப்புத்துறை இத்திட்டத்தை நடைமுறை படுத்திவருகிறது.

குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள், புறக்கணித்தல் மற்றும் சுரண்டல்கள் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடிய துன்பச்சூழல்களைத் திறம்பட குறைத்துக் குழந்தைகளுக்கு விசாலமான வலிமைமிக்க பாதுகாப்பான சூழ்நிலையை உறுதி செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் ஏற்படுத்தப் பட்டது.

## இலக்கு மக்கள் :




0-18 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்காகவும் இத்திட்டம் செயல்படுகிறது. சட்டத்துடன் தொடர்பில் வரும் குழந்தைகளும் உள்ளடங்குபவர்.

## திட்டங்களும், செயல்பாடுகளும் :




குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள், புறக்கணித்தல் மற்றும் சுரண்டல் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடிய துன்பச்சூழல்களைத் திறம்பட தவிர்க்க அனைத்து அரசு துறை மற்றும் அரசு திட்டங்களையும் ஒருங்கிணைந்து குழந்தைகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறது.

## சட்ட ரீதியான அமைப்புகள் :




## அமைப்பு :

**பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்**

↓

**மத்திய திட்ட செயலாக்கு அலகு**

↓

**மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்**

↓

**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு**

மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கத்தின்கீழ் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அந்த அந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையில் செயல்படுகின்றன. குழந்தைகள் உரிமைகள் குறித்து பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த பொறுப்புணர்வினை பொது அமைப்புகளிடையே உருவாக்குதல், சேவை வழங்கும் அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல், அனைத்து மாவட்டங்களில் உள்ள குாந்தை பாதுகாப்பு சேவைகள், திட்டங்கள் மற்றும் அமைப்பு பற்றிய தகவல்களை பொது மக்களிடையே கொண்டு சேர்த்தல், இவ்வமைப்பின் முக்கியபணி குழந்தைகள் நலச் சட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்துதல்.